மெய்ஞ்ஞான வெண்பா

சு. நரஸிம்மேச்வர சர்மா
(Retd. Staff Officer Imperial Bank of India)
இயற்றியது

ராமபவன்
25, ஸர் மஹம்மத் உஸ்மான் ரோட்
மதராஸ்-17.

மெய்ஞ்ஞான வெண்பா

சு. நரஸிம்மேச்வர சர்மா
(Retd. Staff Officer Imperial Bank of India)
இயற்றியது

*

ராமபவன்
25, ஸர் மஹம்மத் உஸ்மான் ரோட்
மதராஸ்-17.

விலை 8 அணா

அருட்பெருஞ்ஜோதி அச்சகம்,
சென்னை-1.

முன்னுரை

நூல்கள், சாதாரணமாக, முன்னுரை இன்றியே சுய ஒளியால் விளங்கவேண்டியவை. ஆகவே, 'மெய்ஞ்ஞான வெண்பா' என்று பெயரிட்டுப் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் பாடல்களை தமிழன்பர்களுக்கு அளிப்பதில் நான் சொல்லவேண்டுவது அதிகம் இல்லை.

சற்று முன்பே உத்தியோக நிவர்த்தி பெற்றுக்கொண்ட நான், என் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு, அவ்வப்பொழுது தோன்றிய அபிப்பிராயங்களைக் கவிகளாகச் சித்தரிக்க முற்பட்டேன். அவைகள் வேதாந்த தத்துவங்களைப் பற்றியோ, அல்லது சமூக சம்பிரதாயங்களைப் பற்றியோ, ஒன்றும் புரட்சிகரமாகச் சொல்லுவனவல்ல. முக்கியமாக எல்லா கல்வி கேள்வி பெற்ற மனிதர்களும் அவ்விஷயங்களைப்பற்றித் தத்தம் பகுத்தறிவை உபயோகித்துத் திண்மனத்தாராய் ஆராயவேண்டும் என்பதை வற்புறுத்துவதே என் நோக்கம்.

உண்மையைக் காட்டிலும் கடவுளில்லை. அறிவைத் தவிர சாதனமில்லை.

சித்திரை - விஜய (April 1953)
ராமபவன்
25, ஸர் மகம்மத் உஸ்மான் ரோட்,
மதராஸ்-17.

சு. ந. சர்மா

மெய்ஞ்ஞான வெண்பா

—

எத்தனையோ கோயில்கள் எத்தனையோ கொள்கைகள்
அத்தனையும் விஞ்சிநின்ற வற்புதமாய்—சித்தத்தின்
மாணக் கிடந்தானாய் மாய வுலகமெலாங்
காணக் கிடந்தானைக் காண். 1

சொல்வேனும் சோராச் சுயவறிவின் சோதிவழிச்
செல்வேனும் சொற்றச் செவிப்பீரை—வெல்வேனும்
ஏவினவா வென்றுணர்வீர் ஈண்டுரைப்ப வெய்வதெலாந்
தேவினவா தீராச் சிகல். 2

நாவாள னாகை நண்ணியதும் வெண்முளரிப்
பூவாரூ ரிற்பிறந்த புண்ணியமே—சீவாள்
நிலையுறுசீ ரெய்தியதும் நேசமொடென் பெற்றோர்
கலையுருசி காட்டியதன் கண். 3

அந்தத் தமிழ்நாட்டவர் அஞ்சாதென் விற்பனத்தைச்
சந்தத் தமிழ்ப்பாட்டிற் சாதிப்ப—வந்தனனாய்
சென்னிக் கவித்துருகி செப்பச் செவிகொண்மின்
கன்னிக் கவிக்காணிக் கை. 4

முன்னார் மொழிந்தவைக்கு முற்றும் முரணிலவாய்ச்
சொன்னாரே துய்ப்போர்க்குச் சொல்லுகிலேன்—என்ன
தாமேயே முன்னுவர்க்கு மன்னார் தழுவுவர்க்கும் [ணமும்
ஆமேயிந் நூலி னளிப்பு. 5

எங்கும் விரவியுறை யீசனை விண்வயினும்
பொங்கும் புணரியினும் போற்றாது—வெங்கற்
சிலைகளையே சேவிக்கும் சிற்றறிவோய் ஞாலக்
கலைகளையே புத்தேளாய்க் காண். 6

கல்லுருவும் காசினிக்கே காழாங் கடவுளன்றிக்
கொல்லுருவும் வட்டிகையும் கும்பிடுவாய்—குல்லகனே
பிம்பத்தி னூடே பிரமானு பூதியெனும்
சம்பத்து வாராது சார்ந்து. 7

கலையும் பகுத்தறிவும் காசிலருங் காப்பு
நிலையாகக் கைப்பிடியார் நித்தம்—சிலையுமுரு
மந்திரமும் பற்றியக்கால் வாய்த்தவிரு கண்ணவிப்ப
அந்தகராய்க் கோல்கொள்வ தாம். 8

தேனும் சுரும்புகட்குத் தீனியுமாம் தாதுமுளை
ஈனும் விதையுமாம் ஈர்க்காக்கால்—கானம்
அணிசெயும் வண்ணமல ராலயப்பா வைக்குப்
பணிசெயக் கொய்தென் பயன். 9

ஏவிணையுங் கற்றே விருப்பிடத்தே வாவல்கள்
காவிணையு நான்காங் களகங்கள்—நூலணிவார்
ஆதரிக்கு மாகமங்க ளற்றனவே வாழ்விலெழு
கோதரிக்குங் கொற்றக் குணம். 10

சின்னங் களிற்சிதைந்த சீரிற் சிறுமதங்கள்
பின்னப் படுதலிலாப் பேருணர்வு—தன்னை
அவிழ்த்துத் தெளிவுறுத்தா வாண்டோர் கருத்தைக்
கவிழ்த்து மருளுறுத்துங் காண். 11

கோயிலா யாண்டுங் குவவுவயின் திக்குதொறும்
வாயிலா வெல்லா வனைபொருளுந்—தீயிலா
ஆதனமாத் தெய்வமமர்ந் தாளுமே சேதனத்தைச்
சாதனமாக் கொண்டு சதம். 12

ஆலயங்கள் யாவு மருச்சகரின் மேடைகளா
மாலயங்க ளாற்றிடுதன் மாற்றியபின்—நூலறிஞர்
புத்தறிவு போதிக்கும் பொன்னரங்காப் பூத்திலங்க
எத்தனைநாட் காப்ப தினும். 13

காலைபகன் மாலைதொறும் 'காயத்ரீ' யைக்கருதி
வாலறிவு வாளா வழங்கென்ன—சாலவுமே
யாசிக்க வாய்த்திடுமோ யாத்தபெரு நூல்களெலாம்
வாசிக்க வன்றோ மதி. 14

ஓமென் மருமவொலி யோத முணுமுணுக்க
ராமென் பெயரொன் றிராப்பகலா—மீமென்று
மந்திரமு மற்றென்று மாநிலத்து யாத்திரையைத்
தந்திரமாத் தாண்டனினைத் தாய். 15

சொற்புனைந்த தோத்திரங்கள் சொல்லித் தொழுதேத்தி
கற்பனையிற் கண்ட கடவுளரை—வெற்பனைய
கைம்மாறு கோருங் கடையரோ ஊனுடையுச்
செய்ம்மாறு சேருந் திரு. 16

கொட்புருளும் வாழ்விற் குரவரொடு பக்தாது
நட்பருளு முத்தியென நம்பினரா—உட்பொருளுங்
காணாச் சபதபங்கள் சாதனங்கள் கையாடல்
நாணாக் குரங்கின் நடை. 17

குருடர்கைக் கோத்த குருடராய் போலிப்
புருடர்க்கு மேவல் புரிவீர்—அருடா
மூக்கறையான் வைப்போர் முடிநின்று வானுலகை
நோக்குறுவா னேக்கியவர் போன்று. 18

மாகவெளி மல்கியொளிர் மண்டலங்க ளூடுருவித்
தோகவணுத் தூசினிலுந் தொக்கியங்கும்—ஏகவியன்
சக்திக்கு நின்பூசை சாதிப்ப தொன்றுமிலை
பக்திப் பகட்டெல்லாம் பாழ். 19

பூசனையும் வேள்விகளும் போதமின்றி யொன்றுபட்ட
ஈசனைப்பல் பேர்சொலலும் யான்வேண்டேன்—யோசனையில்
மானிடத்துக் காருளத்தின் மாசலம்பிக் கீழொழுக்கின்
கூனெடுத்து நிற்கக் கொடு. 20

தொண்டும் சமூகநலத் தூய்மையுமே நோக்காகக்
கொண்டுய் திடுவீர் குவலயத்தே—அண்டி
இழுக்குறா திந்நெறிமற் றேதமுண்டு தெய்வம்
வழுத்திநன் றாற்றார் வழி. 21

ஈறாக யாக்கை யெரியி லிடப்பட்டு
நீறாக நிற்கும் நியதியுண்டு—மாறாகச்
சாவாதார் மேனிகளைச் சாம்பல் மயமாக்கின்
தூவாகத் துப்பாமோ சொல். 22

குறியிட்ட நெற்றிக் குடுமிபூண் சூழிப்
புரியிட்ட வாகமும் பூசல்—வெறியிட்ட
வேதாந்த வாதமும் வேள்விவிர தங்களும்
மீதாந் தவமன்று மின். 23

மக்க ளிடும்பைகளை மாய்த்திடலே மாதவமாய்த்
துக்கநிலை நின்றோர் துயராற்றத்—தக்கவகைச்
சேவகமே மெய்யோகாய்ச் செய்ம்மின் சிறப்போங்கிப்
பூவகமே பொன் னுலகாய்ப் போம். 24

பீலிகையு மொய்க்கும் பிரசக் கணங்கடமைக்
காலியையக் காக்குமதி கற்றிடுதி—பாலின்
அமுதாரச் சேவை யறாதிழைத்தி நின்சிறப்பும்
சமுதாயச் சீரதனின் சார்பு. 25

புற்புரியி லெள்ளும் புனலு மிறைத்தலினால்
முற்பிருந்தோர்க் கேது முயக்குற்றாய்—பொற்பேர்
உடலற்று மாவி யுலவுங்கொல் போதின்
மடலற்று முண்டோ மணம். 26

குடத்தடைந்த காற்றுக் குடமுடைந்து மாகத்
தடத்தடைந்த தன்மையினிற் றக்காக்—கடத்தடைந்த
ஆவியினீர் சாயனிழ லாயுளுட னேயுமதே
வாவியினீர் வார்த்திட்ட வாறு. 27

நெய்தாரை வேள்வி நெருப்பிலெழு நீணுவிற்
பெய்தாரக் காரியத்திற் பேறென்றும்—எய்தாரே
சோற்றிற் சொரியச் சுகமுறுத்துந் தெள்ளுருக்கை
நீற்றிற் சொரிவதோ நேர். 28

தடங்குவிந்து வாநின்ற தத்துவத்தைத் தோச்
சடங்குவிந்து சாதனங்க ளென்ப—மடங்குவிந்து
வங்கமா வாரூத வாரிக் கரையேற்ற
வங்கமா வாராத வை. 29

பத்திப் பணிமுறையும் பண்டைக் கிரியைகளும்
பித்தாத் தலைக்கேற்றிப் பேணுதே—குத்திரத்திற்
கொந்தளிக்கும் புந்தி குவிந்து குழப்பமற
வந்தளிக்கும் ஞான வழி. 30

முத்தியென்றும் சித்தியென்றும் மோனமென்றும் ஞான
[மென்றும்
தத்தைமொழி சாற்றுநரைச் சாராதிர்—புத்திநெறி
நூலுரைப்ப வற்றெருடுநும் நுண்ணறிவி னேக்கிபுவி
பாலிருப்ப வோர்ந்த படி. 31

கற்றுக் கழிபயிலாக் காரணியப் புத்தியினைப்
பெற்ற படைக்குவட்டுப் பேழ்நிலையை—விற்றே
இருட்டுக் கடைவழியி லேங்கிநிற்ற லென்னே
குருட்டுப் பழக்கங்கள் கொண்டு. 32

தம்மதமே மெய்ம்மதமென் றேயாத் தருக்கமிடும்
வெம்மதமே மேற்கொண்டார் வீணரன்றே—சம்மதமாய்
உத்திக்குங் கேள்வி யுலக வனுபவக்கும்
ஒத்தக்கால் மெய்யென் றுணர். 33

சூர்சொன்ன நற்போதம் சோதிச் சுருதிகளே
நேர்சொன்ன மற்றை நிலத்தவர்கள்—யார்சொன்ன
வாயினுமெய் யாகாதென் றூர்ப்பரிக்கு மாணவப்
பேயினுமற் றில்லை பிழை. 34

வானாடர் பாடை வழங்குதிசைத் தென்னிலத்தார்
தேனாடு சொல்லென் செருக்கற்க—மேனாடர்
அங்கிலமு முன்னேற்று மாற்றலுடைத் தாவதனால்
நீங்கிலநாங் கற்றிடுத னின்று. 35

விழுங்கிடவா யங்காத்த வேலையில தென்னின்
கொழுங்குடினை நீர்கணிலை கொள்ளா—திழிந்திடும்போல்
நின்றிடுத லென்றதிலா நேரமெனு நீத்தநிறை
சென்றிடுத லொன்றே செயும். 36

மைக்கோள் மறைத்தன்ன பன்னரிய மாயமாய்ப்
பைக்கோள் படிவனைந்த பண்டையுரக்—கைக்கோளன்
பூவுழைக் காலமிடம் பூந்துகிலாப் போர்த்துவிட்டான்
பாவிழை பூடிழையாய்ப் பாய்த்து. 37

இருங்கால வாசுக் கிரையாக வெய்தி
வருங்காலம் வீங்கபடி வாரா—கருங்கால்
கழுதன்ன பற்றுகிலாக் கைதவமாக் கண்முன்
பொழுதென்னும் வாரிகடி போம். 38

பெற்ற விடம்விட்டுப் பேரா திருந்திடினும்
உற்ற பொழுதின்பே ரோட்டத்தை—நிற்றற்
சமைப்பானு முண்டோ சரீரத்தை மூவா
தமைப்பானு முண்டோ அறை. 39

நற்பொழுது நாடி நனிமயங்கி யாருடம்
சொற்பழுது சோதித்துச் சோம்புவரோ—நற்குக்
கடனாற்றுக் கூடுங் கருமங்கட் காவா
தடனாற்று முள்ள முளார். 40

சோதிடமென் பொய்க்கலையிற் றேயமதித் துல்லியமும்
சூதிடுநின் றைரியமுஞ் சுண்டிவிடும்—மீதிடத்திற்
கோள்கணிதம் வீணலையும் கூத்தறிவாய் ஆறறிவோய்
கோள்கணிதம் நிற்கென் குறி. 41

பஞ்சாங்கம் பார்த்துப் பலனென்றும் பாழென்றும்
நெஞ்சாங்கு நைய நினையாதீர்—மஞ்சோங்க
மங்களங்கள் வாராக்கால் வந்தடுத்த தொந்தமுகத்
தங்கடங்கள் சித்தந் தரும். 42

மலைக்கப் பணைத்தொழில்கள் மண்டியெழ மண்ணோர்
நிலைக்கப் பணிபுணர்ந்தார் நேரக்—கலைக்கேட்டும்
இற்றே செயப்பொருவ வீர்க்கசெவி யேற்பரோ
பிற்றே செயப்படுமென் பேச்சு. 43

பொலக்கூற்று பொங்கும் புராண இதிகாசம்
இலக்கியத்தி னின்புக் கிருக்கை—பிலத்திற்
புதையலைப் பாராது பூதங்காண் பொக்குங்
கதைகளையே காண்பார் கதி. 44

சாலிச் சிலகரந்த சாவித் தவக்குவையைப்
போலியவிக் காதைகளிற் போதனைகள்—கூலிக்குப்
பாடித் திரிகின்ற பாகவதர் பாலுளதோ
தேடித் தெரிகின்ற தேர்வு. 45

மண்ணிரப்பக் குற்றடியை மாவலிக்குக் காட்டியபின்
விண்ணிரப்ப வீங்கி விரைந்தானை—எண்ணிருத்திக்
கெஞ்சியபின் விஞ்சுவதும் கேட்பதொன்றும் கொள்வ
வஞ்சகனீ கல்லாது வாழ். [தொன்றும்

கண்ணிற் படாதெய்த கள்ளக் கணையுருவ
மண்ணிற் குரக்கரசை மாய்த்ததுவும்—அண்ணர்க்கு
நாடொழித்துத் தம்பியர்க்கு நல்கி நயந்ததுவும்
காடுழைத்த கோமான் கடவு. 47

அயலாம் மடந்தையரை யாவலொடு புல்கும்
மயலான் மறப்பெற்றி மல்கும்—செயலான்பின்
கொல்லுதலி னாக்கங் கொடுப்பான்ற் சாகசமாச்
சொல்லினன் சொல்லொணு தான். 48

வேட்டல் மனமெழின் செவ் வேளின் வழிநடவீர்
காட்டிற் றனித்தாளைக் காமுற்றுக்—கேட்டிலனுய்
வாரணங் கொண்டு மருட்டித் தழுவுவதோ
ஆரணங் கொண்ட வமைத்து. 49

காமத்தார் கோடுங் களவார் கொலையிழைப்பார்
ஈமத்தார் சீற்றத் தெரிவிழியார்—வீமத்தார்
போகத்தார் பொய்த்தாராம் புற்குணத்து வானவரை
ஆகத்தாற் சிக்கென் றகற்று. 50

உருவறவே யோர்வா ருணர்வுக்கே வாய்ப்பாய்ப்
பொருவுறவை யுள்ளம் பொருத்தா—தருவருப்பாய்
ஆறுதலை யத்தியரி யாமைமீ னேனமெனக்
கூறுதலி னுறுதலென் கொல். 51

தோன்றுவருங் கேள்விகளிற் றேய்ந்து கிடந்துவிட்டார்
இன்றிவருஞ் சூழ்நிலையி னின்னல்கள்—வென்றவரோ
எந்நாட்டார் எம்மதத்தார் எந்நிறத்தா ராயினுமெய்ம்
முன்னுட்ட முற்றியர்பின் பற்று. 52

முன்னமுகிழ் நாடுகளின் முன்னணியி னம்நாடுஞ்
சொன்னபுகழ் மீளச் சுதந்திரத்து—வன்னக்
கொடியசையக் கொக்கரித்தற் போதா மனக்கார்
விடியசெய வேண்டும் விரைந்து. 53

எத்தொழிலு நேரி னிழைப்பா னனிபயின்றே
அத்தொழிலின் மேவ லறிவீர்காள்—புத்தொழிலாம்
ஆட்சிசன நாயகத்தி லாரறிவு தேவையிலாக்
காட்சிதருங் காலங் கடிது. 54

மூளைத் திறல்களிலே மொய்காமர் மங்கையர்கள்
காளைக்கு நேரெனினும் காளைசெயார்—வேளையினில்
சூல்கொண்டு பெற்று மகவைச் சுரக்குநகில்
பால்கொண்டு காக்கும் பணி. 55

பெண்மைத் தனிப்பணியால் பேரெழிலால் நாணியலால்
திண்மைத் திணியாத் திருவுடலால்—கண்மையராய்
வீட்டின்கண் வார்குழலார் வீற்றிருப்பர் ஆடவர்கள்
நாட்டின்கண் ணாட்ட நட. 56

காணென்று காசுகொளுங் காரிகைகண் மானுவரே
நாணென்று கல்லாத நங்கையர்கள்—கோணின்றிக்
கற்பொன்றே காக்கும் கலனும் இயலழுகே
பொற்பென்று போற்றப் பெறும். 57

காத றவிர்க்கரிது கையாப் புணர்க்கைக்குப்
போதரூறும் சூலும் பொரப்போமோ—மாதரீர்
கேழல் வயமென்னக் கீணைக் குடியாக்கி
வாழல் மதியீன மாம். 58

காலம் இடம்பொறிகள் கட்டுகளுட் பட்டநரர்
தாலம் கடந்ததனித் தத்துவத்தின்—சாலம்
பயத்தவலை பாரிற் பயின்றறிப வெல்லாம்
கயத்தவலை கண்டதொக்குங் காண். 59

மாறுங் குணமொன்றே மாறாத தத்துவமாய்
ஊறும் படைப்பூடே உள்குவரை—மீறும்
அலகில் வலமையதாய் ஆழ வடிப்படையாய்
உலகில் ஒளித்த வொளி. 60

ஒன்றென் றுணர்ந்தோ ருரைபட்ட வும்பரெலாம்
அன்றென் றறிந்தோ ரகிலமெனும்—மன்றென்றும்
ஆதிபொரு ளாட்டுடைத்தே அண்ட மணியாத
மீதிபொருள் மித்தைப் பொருள். 61

புல்லுயிர்க ளுள்ளத்தே புக்குப் பருத்திருக்குந்
தொல்லை 'அவித்தை'த் தொடர்பறுக்க—வல்லதெனும்
தெய்வமேநின் சின்மயத்தைத் தீண்டியவெம் 'மாயை'யினை
உய்வறுக்கச் சோம்பியதே னே. 62

வாளற்ற பானுமதி மீனற்ற வானவெளி
நாளற்ற காலகதி நல்குடலில்—கூளவுயிர்
நீரற்ற வேலைநதி நேர்மைத்து நிர்க்குணமாப்
பாரற்று நின்ற பரம். 63

நாற்றமது வண்ணமிலா நாண்மலரும் யாழிசையுங்
தோற்றகுயிற் றொண்டைத் தொனியிலவும்—ஏற்றவிரி
வார்தழையும் வாமநட மற்றமயின் மானுமரோ
பார்கழிய நின்ற பரம். 64

மாந்தர் மனத்திடையே வானும் விரியுலகும்
ஏந்துங் கருத்தி னியல்பினவாப்—போந்தவை
என்பவரு முள்ளார் எரிக்கோழிக். கம்புதைத்துத்
தென்படுவ போன்ற திகைப்பு. 65

இயற்கையே தெய்வ மிசைக்கா வியமாய்
முயக்குற்றுக் கல்லாரே மூடர்—செயற்கட்டி
ஆசனத்தி லூன்றி யகத்துணுட் டம்வைத்தும்
காசினியைத் தேடுங் கருத்து. 66

கட்கொளி நாசிக்குக் கந்தம் செவிக்கோசை
தொட்டறிவ நாக்குச் சுவைதருவ—இட்டிழைத்த
அண்ட மழைத்தருள வானந்த மேற்பவரைக்
கண்டிக்கக் காரணமென் காண். 67

அஞ்சு புலனடக்கி யான்றபுவி யின்றசுகம்
நஞ்சென் றகற்ற நவின்றிட்டார்—எஞ்சும்
பொருளுண்டோ சீவன் பொறியவிக்கின் முற்றும்
இருளன்றோ வுட்புறம்பு மேய்ந்து. 68

மட்புதைந்த வாழ்வின் மதிமயங்கித் துன்புடற்ற
உட்புகைந்த சோகத் துருகாதிர்—எட்பதிந்த
கோகனக வில்லுலகாக் கொண்டுகப்பீர் வெய்யோன்முன்
கோகனக வியிலிதங் கூர்ந்து. 69

'மாயா' உலகமென மக்களுணர் வைப்பொய்த்துச்
சேயாச் சமீபத்தைச் செய்யாதீர்—ஓயாது
தேன்சுமந்த தும்பித் தெவிட்டாப்போற் றுய்ப்பீர்காள்
வான்சுமந்த மேதினியின் வாழ்வு. 70

கணத்தி லிருஇலக்கக் கற்றொலைவு வாவுங்
குணத்தவொளி வான்வேய்ந்த கோளம்—வணர்த்தூரப்
பல்லா யிரவாண்டு பற்றுமெனின் பொய்ப்படைப்புப்
பொல்லா யிரும்பெருமாப் பொய். 71

சுட்டிப்பொய் பொய்யென்று சூழுலகைக் காட்டுபவர்
எட்டிப்போ யுய்ய விடமுண்டோ—வெட்டிப்போர்
பேசாது பார்மிசையே பேழ்வாழ் வியன்றவரைக்
கூசாது கொள்ளல் குணம். 72

வந்த பொழில்களெலாம் வஞ்சமென வாதித்துப்
பொந்தி யிருட்குழம்பு பொங்குமிடம்—அந்தகன்
நீலக் கடுவனை நில்லாக்காற் றேடல்போல்
மூலப் பொருட்காம் முயற்று 73

விந்தையிய லந்தவளம் வித்தகனார் புத்தகமாய்ச்
சிந்தைசெயத் தான்ஞானம் சித்திக்கும்—சந்ததமும்
கண்மூடி மண்மறக்கின் கங்குனிறை சூனியமும்
எண்மூடி யெக்களிக்குமே. 74

ஒன்றாய துண்மை யுலகநிழற் கூத்தென்று
வென்ற வழக்கு வெறும்பேச்சே—ஒன்றா(து)
இயக்கறிவு தூங்குலகென் றீரா யியற்கை
மயக்கறவே வைத்த வகை. 75

அறியும் நயனமுடை யான்மா முடமாத்
திரியும் சடங்குருடாச் சேர—விரியுமயில்
கூட்டுறவா லாவதன்றோ கொள்ளை யுருவுடைத்தாய்
ஒட்டுறும் பூதத் துலகு. 76

உற்பத்தி யற்றதெனச் சிற்பொருளை யொப்பியவர்
உற்பத்தி யற்ற உயிரலதும்—கற்பித்த
ஆண்பெண் ணுறவா யமைந்தவினை நித்தியமாய்க்
காண்பின்யா தாங்குற்ற காசு. 77

நானே பிரம’மென நல்கு நகற்றகைய
ஊனே ருயிர்கட் குபதேசம்—தீநேர்
இறுமாப் புறுத்துவதே யிம்பர்வாழ் மாந்தர்
உறுமாக் குலத்து ளுளர். 7

தோன்றலிரை தின்றற் றுலங்குபால் வேற்றுமையின்
ஈன்றலொடு மூப்புற் றிறத்தலுங்—கான்றலான்
மக்களிரு கானீத்த மாக்கள் கடவுணிலை
ஒக்க வருகரா மோ. 79

இந்திரவில் வாங்கி யிழைகிழித்து நெய்தொழிலின்
அந்தறியி லாடையா வாக்குவபோற்—றந்திரமாம்
மக்கடம தான்மா மனுநீத மானமுதற்
சொக்கத்திற் றேய்தலெனுஞ் சூழ். 80

சதமன்ன நின்றவெலாம் சாகுமெனுந் திட்பம்
நிதமுன்ன னீக்கிவிடாய் நெஞ்சே—மதனம்
மடங்கல் விளக்குமுன் மாதிரத்தார் கோருங்
கடங்கள் முடித்தே கழி. 81

காலன் வரவஞ்சிக் கண்ணீர் சொரியாதீர்
சாலத் துயரே சரீரநிலை—ஞாலத்தே
மன்னு மிடருழல்வீர் மாய்வு மறலிதா
இன்னு வொருங்கே யிறும். 82

சாவது மெய்யெனினும் சாந்துணையுந் தந்தமக்(கு)
ஆவது நன்றென் றனுபவியும்—மேவும்
அகந்தை யகற்றி யமைதியொடெஞ் ஞான்றும்
உகந்துகந்தே யுய்வீ ருலகு. 83

அல்லொக்கு நாரகமு மந்த வருளுலகும்
கல்லார்க்குக் காட்டுவித்த கற்பனையே—எல்லார்க்கும்
போக்கும்வே றின்றிப் புறங்காடு புக்கெரிதல்
மோக்கம்வே றென்ன முடிவு. 84

உம்மையிலை யாவர்க்கும் ஊழுமிலை நிச்சயமாம்
இம்மை யொருவாழ் விகழாதீர்—செம்மைசெறி
மண்ணுலகை யெள்ளற்க மாய்ந்தபின்னர் வாவதெனும்
விண்ணுலக வேட்கையெலாம் வீண். 85

சன்மமும் சூழ்நிலையும் தற்செயலாச் சார்வனவும்
கன்மமெனச் சொல்வர் கலக்குறு—வன்மையொடு
நேமித்த வேலை நிராசை மனத்தாற்றி
நேமித் தகவொழுகா நில். 86

வாழ்க்கைச் சிறுபயணம் வவ்வும் செயிரோவக்
காழ்க்கற் றிடுதி கடவுளது—போழ்த்த
ஒளிப்பிழம்பின் கூறுகளே உய்வவெலா மென்னக்
களிப்பெழும்பக் காலங் கடத்து. 87

மறுமைச் சிறப்புகளில் மாலுறவிவ் வாழ்வின்
வறுமைக் கடுங்கனல்வாய் வாடிப்—பொறுமையொடு
நாடுடைய நில்லர்தீர் நைந்தோரைக் கைதூக்கிப்
பீடுடைய வாழ்வு பெற. 88

குலநிறப் பால்சமயக் கொள்கைமொழி நாடாம்
பலதுறையிற் பற்றுட் படாமல்—உலகினுறை
மக்களெலாஞ் சுற்றமெனு மாநெறிநில் அன்பெனும்
சக்கரத்தின் சாலையிலே தான். 89

தன்னுயிர் மெய்யாக்கம் தாரணிக்கே சொந்தமென
மன்னுயி ரோம்பும் மதங்கொள்வாய்—எந்நாடும்
ஏழைமையும் பேதைமையும் ஈனுந்தி துற்றவரைப்
பேழைமையும் பெற்றற்பாற் றன்று. 90

பருமத்தப் போர்விறலைப் பாராட்டாப் பண்பார்
தருமத் தளையினையே தாங்கும்—ஒருமித்து
மானிட வர்க்கமெலாம் மாடுயரப் பாடயரும்
ஊனிடு துன்ப மொறும். 91

ஏனை யுயிர்கட் கிடையூ றிழையாமை
சேனை யுதவச் செறுவாமை—ஊனமிலா
நல்லறமே யாயினுந்தம் நாடுபெண்டிர்க் கூறுவரின்
கொல்லுரமே யாண்மைக் குறி. 92

நீத்தற் பெருமையினை நித்தியமும் போற்றுகிறீர்
ஏத்துந் தகைமைத் திதுவன்று—நீத்தொழிதல்
பேடுகளே பேணுமுறை பேருழிப் பீடைகளைச்
சாடுவதே திண்மைக்குச் சான்று. 93

உலகத் தளைகளறுத் துய்வோர்க்கே முத்தி
நிலயம் நெருங்குமெனும் நீதி—பலவாகச்
சாற்றிடினும் மேதிகட்குச் சஞ்சரிக்க வேறுண்டோ
சேற்றுக் குளமன்றிச் சேர்பு. 94

தெற்றுச் சடலமொடும் தேவிற் கலந்தநிலை
பெற்றுவிட்டே மென்று பெருமிதமாச்—சொற்றுபவர்
ஆகப் பிடிப்பு மகற்றுகிலா ராய்க்காண்பர்
தாகப் பசிமோகத் தால். 95

துன்பிலுழன் மாந்தரினம் துன்னுநலம் பெற்றுயர
அன்பிலுழை யாத லறமன்று—பின்பு
துகினமுவ நிற்றற் றுறவன்று தாமென்னும்
அகநமுவக் கல்லா தவர். 69

கேடி லுடலிருக்கக் கேவலமாய்க் கைநீட்டிப்
பாடி யிரந்தூட்டும் பான்மையர்க்குப்—போடலிவர்
ஐயம் புகவீந்தா ராரு மிலாராகின்
ஐயம் புகவீந்தா ராம். 97

விடைகொண்டு வீட்டினரை வீதிதொறும் கந்தை
உடைகொண் டிரப்பாரா யோட்டு—நடைகொண்டு
பாரச் சடைகொண்டார் பாடுபடு மில்லார்க்குப்
பாரப் படையென் றறி. 98

சுழுத்திக்கு மப்பாற் றுரியமெனத் துஞ்சிக்
கொழுத்துண்ணும் சோம்பரைக் கூவி—வழுத்தா(து)
ஒருமுளையே கண்ட வுழுநிலத்திற் பச்சென்(று)
இருமுளையா யீந்தாரை யேத்து. 99

அயர்வுதரப் பேரொலியி லாண்டவனைப் போற்றி
உயருதவி யீட்டலென்ப துண்டோ—வியர்வுதிர
ஊக்க வுழைக்கைக்கே ஊதியமாம் தெய்வங்காத்(து)
ஏக்கப் பிழைக்கைக்கே யேசு. 100

அந்தத் தமிழ்நாட்டீர் அன்பின் முதலளிப்பாச்
சந்தத் தமிழ்ப்பாச் சதமாகத்—தந்தனன்யான்
பூக்குப் பருதியொளி போனீவிர் பாராட்டும்
வாக்குக் கவாக்கொண்ட வன்.